# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் II பரீட்சை – 2026 சனவரி**

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இவ்வினாத்தாள் புதிய தொழினுட்ப அபிவிருத்திகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் போக்குகள் ஆகியவற்றில் கூடுதல் கவனத்தைச் செலுத்தி, தகவல் தொழினுட்பவியலின் ஒட்டுமொத்த பகுதிகளையும் பரீட்சித்திருந்தது. இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு தகவல் முறைமைகளைப் பாதிக்கின்ற ஒழுக்கநெறி, சமூக, மற்றும் சட்டச் சூழல்கள் பற்றிய பரந்த புரிதல் தேவை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்வினாத்தாள் A, B, C என மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது. மேலும், அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது கட்டாயமானதாகும்.

மதிப்பீட்டுச் செயன்முறையின்போது பொதுவாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு, கீழே தரப்பட்டுள்ளன :

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்த பல்தேர்வு வினாக்கள் டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள் என்ற உரிய பாடப் பரப்புகளில் ஒட்டுமொத்த அறிவையும் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குப் பதிலளித்திருந்ததுடன் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

வினாக்கள் **1.3, 1.5** இற்கு விடையளிக்கும்போது பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பல்தேர்வு வினாக்களுக்கு சரியான பதில்களை வழங்கியிருக்கவில்லை.

MCQ வகை வினாக்கள் பொதுவாக முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய அறிவைப் பரீட்சித்திருந்தன.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

### வினா இல. 02

இவ்வினா கற்பனையான ஒரு தனியார் வைத்தியசாலை தொடர்பான தரவுகள், தகவல்கள் மற்றும் தகவல் முறைமைகள் பற்றிய அடிப்படைகளைப் பரீட்சித்திருந்தது. இவ்வினாவின் **பகுதி (c)** ஆனது ஒரு நடைமுறைச் சூழ்நிலையில் பரீட்சார்த்திகள் தங்களது அறிவைப் பிரயோகிப்பதை அளவிடுவதற்கு முயற்சித்திருந்தது. இவ்வினாவின் முதல் பகுதியானது, தகவலிலிருந்து தரவை வேறுபடுத்துமாறும் அவை ஒவ்வொன்றுக்கும் வைத்தியசாலையின் சுகாதாரத் தகவல் முறைமையிலிருந்து ஒவ்வொரு உதாரணத்தை வழங்குமாறும் கேட்டிருந்தது. இந்தப் பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். தகவல் முறைமை என்பதால் கருதப்படுவது யாதென விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்த இரண்டாம் பகுதிக்கும் ஒரு பொதுவான மட்டத்தில் வெற்றிகரமாக விடையளிக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தனிப்பட்ட தகவல் முகாமைத்துவ (PIM) மென்பொருள் போன்ற கணினி அடிப்படையிலான முறைமைகளைப் பயன்படுத்தி, தனிநபர்கள் முகாமை செய்யக்கூடிய தனிப்பட்ட தகவல்களுக்கு மூன்று உதாரணங்களைப் பட்டியலிடுவது மூன்றாவது பகுதியில் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கான விடைகள் மிகவும் மோசமான மட்டத்தில் காணப்பட்டன.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

இவ்வினாவானது தகவல் தொழினுட்ப உட்கட்டமைப்பு, முகில் கணினியியல் மற்றும் நிறுவனத்தில் மென்பொருளின் பயன்பாடு ஆகிய பரப்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** முதலாவது பகுதியில், தகவல் தொழினுட்ப (IT) உட்கட்டமைப்பு என்பதாற் கருதப்படுவது யாதெனக் கேட்கப்பட்டது. இதற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**(b)** முகில் கணினியியலைப் பயன்படுத்தி ஒரு நிறுவனத்தின் வினைத்திறனை எவ்வாறு அடைய முடியும் என்பதை மூன்று வழிகளில் தெளிவாக விபரிப்பதற்கு ஒரு சில பரீட்சார்த்திகளால் இயலாமற் போயிருந்தது. மூன்று வகைகளின் கீழ் முகில் கணினியியலின் நன்மைகளை அவர்கள் புரிந்து கொள்வதில் ஓர் இடைவெளி காணப்பட்டதை இது சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், வினாவானது வினைத்திறன் வகை மீது விசேடமாகக் கவனஞ் செலுத்தியிருந்தது.

**(c)** ஒரு நிறுவனத்தின் வணிகச் செயற்றிறனை மேம்படுத்த மென்பொருள் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்களைப் பட்டியலிடுமாறு இப்பகுதி பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்குச் சரியாக விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தங்களுடைய விடைகளை சரியான சொற்பதங்களில் முன்வைப்பதில் இடர்பட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இந்தப் பகுதி நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகளின் வகைகளையும் ஆடை வணிகம் பற்றிய விவரணத்துடன் தொடர்புடைய இலத்திரனியல் - வர்த்தகம் தொடர்பிலும் பரீட்சித்திருந்தது.

**(a)** **(i)** இந்தப் பகுதியானது முகாமையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருங்கிணைக்கக்கூடிய முகாமைத்துவத் தகவல் முறைமைகளின் (MIS) பல்வேறு வகைகளை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் வினாவின் இப்பகுதிக்கு விடையளித்திருந்ததுடன் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் MIS இன் பல்வேறு வகைகளையும் விபரிப்பதற்குப் பதிலாக தகவல் முறைமைகளின் ஏனைய வகைகள் பற்றி எழுதியிருந்தனர்.

**(ii)** இப்பகுதிக்கு விடைகள் மிகவும் மோசமாக வழங்கப்பட்டிருந்தன. பல பரீட்சார்த்திகள் MIS அறிக்கைகளின் மூன்று அடிப்படை வகைகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, விற்பனை அறிக்கைகள் மற்றும் இருப்பு அறிக்கைகள் போன்ற தவறான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இங்கு, இலத்திரனியல் - வர்த்தகத்தின் வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பொது அறிவைப் பயன்படுத்தி விடையளிக்கப்படக்கூடிய வினாவாக இது இருந்ததால் விடைகள் பொதுவாக நன்கு எழுதப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததுடன், பல பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைக் கொண்டு பொருத்தமான விடைகளை வழங்கியிருந்ததையும் விடைகளை மீளாய்வு செய்யும்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இவ்வினாவானது தகவல் முறைமைகளுக்கான நெறிமுறை, சமூக மற்றும் சட்டச் சூழல்களின் அடிப்படையில் அமைந்திருந்தது.

**(a)** இப்பகுதியானது, விளம்பரங்களைச் செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய பல்வேறு சமூக வலையமைப்புத் தளங்களை அடையாளங் காணுமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்தது. இதற்குப் பல பரீட்சார்த்திகளும் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**(b)** இப்பகுதியானது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதன் நேர்மறையான தாக்கங்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன், பெரும்பாலானவர்கள் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளில் சராசரிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** இங்கு, இணைய மிரட்டலுக்கும் ஊடுருவலுக்குமிடையேயான வேறுபாட்டைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது ஓர் எளிதான வினாவாக இருந்த போதிலும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இணைய மிரட்டல் எண்ணக்கரு பற்றிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

இவ்வினாவானது ஒரு மருந்தகச் சங்கிலியை விவரணம் ஊடாக விளக்கி, அதன் நடைமுறைச் செயலாக்கத்துடன் தகவல் முறைமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழினுட்பப் போக்குகள் பற்றிய பகுதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

**(a)** பல பரீட்சார்த்திகள் பிரதான உந்து சக்திகளை அடையாளங் கண்டிருந்தனர், ஆனால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் உந்து சக்திகளைப் பெயரிட முடியவில்லை என்பதுடன், அது கம்பனியின் தீர்மானமெடுத்தல் செயல்முறையில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதையும் விபரிக்க முடியவில்லை.

**(b)** பாரம்பரிய வணிகச் செயற்பாடுகளை மாற்றியமைத்த அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாக்கங்கள் உட்பட சீர்குலைக்கும் தொழில்நுட்பங்களாகக் கருதப்படக்கூடிய இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாக்கங்களை விபரிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகளால் தொழினுட்பங்களை அடையாளங் காண முடிந்திருந்தது. எவ்வாறாயினும், தொழினுட்பங்கள் ஏன் வெறும் புத்தாக்கமானது என்பதை விட சீர்குலைப்பவையாக இருக்கின்றன என்பதையும் புத்தாக்கங்கள் எவ்வாறு பாரம்பரிய வணிகச் செயற்பாடுகளை மாற்றியமைத்துள்ளன என்பதையும் பரீட்சார்த்திகள் விபரிக்கத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இலங்கைச் சூழமைவுக்கு மாற்றியமைக்காது உலகளாவிய உதாரணங்களை வழங்கியிருந்தனர். இதனால் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றனர்.

**(c)** இவ்வினா 4 ஆவது தொழிற்றுறைப் புரட்சியில் டிஜிடல் மாற்றத்தின்போது கம்பனி எதிர்கொள்ளக்கூடிய சவால்களைப் பட்டியலிடுமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கு நன்றாக விடையளிக்கப்பட்டிருந்ததுடன், பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான பதில்களை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## பகுதி C

**வினா இல. 07**

இது நிறுவன வளத் திட்டமிடல் முறைமைகள், தரவுப் பகுப்பாய்வும் வணிக நுண்ணறிவும், பசுமை IT முயற்சிகள் மற்றும் முகில் கணினியியல் ஆகியவை உள்ளிட்ட நிறுவனங்களில் காணப்படும் தகவல் முறைமைகளின் வகைப்படுத்தலுடன் தொடர்புடைய பரந்தளவிலான தலைப்புகளை உள்ளடக்கிய ஒரு விடய ஆய்வு வினாவாகும். இது குறுக்குத் தலைப்பு ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் நடைமுறை விவரணமொன்றில் தமது அறிவைப் பிரயோகிப்பதற்கு பரீட்சார்த்திகளை கோரியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்கு விடையளிக்க நியாயமானளவு முயற்சித்திருந்தனர். அவர்களின் செயலாற்றுகை இந்தத் தலைப்புகளை இணைப்பதற்கான ஆற்றலின் அடிப்படையில் மாறுபடுகிறது.

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வணிகச் செயன்முறைகளின் வினைத்திறனையும் பயனுறுதித்தன்மையையும் அதிகரிப்பதற்கு தரவுத்தள முகாமைத்துவ முறைமையைப் (DBMS) பயன்படுத்துவதன் அனுகூலங்களை விபரிக்குமாறு கேட்டிருந்த **பகுதி (a)** இற்கு விடையளிக்கச் சிரமப்பட்டிருந்தனர். குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் DBMS என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டிருக்கவில்லை. நவீன தகவல் முறைமைகளில் DBMS ஆற்றுகின்ற முக்கிய வகிபாகத்தைக் கருத்திற்கொள்ளும்போது இது குறிப்பாக கவலையளிக்கக்கூடியதாக உள்ளது.

**(b)** இந்தப் பகுதியில், நிறுவனத்தில் ERP முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களைப் பட்டியலிடுமாறு கேட்கப்பட்டது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் ERP முறைமையின் அனுகூலங்களைத் தெளிவாகப் பட்டியலிட முடியவில்லை. பலர் பொதுப்படையான பதில்களையே வழங்கியிருந்தனர்.

**(c)** தரவுச் சுரங்கம் என்பதால் யாது கருதப்படுகிறது என்பதை விபரிக்குமாறும் தரவுச் சுரங்கச் செயலிகளைப் பட்டியலிடுமாறும் கேட்கப்பட்ட **பகுதி (c)** இற்காக விடையளிப்பதற்கு குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் சிரமப்பட்டிருந்தனர். அதிகமான பரீட்சார்த்திகள் தரவுச் சுரங்கம் பற்றி விபரித்திருந்த போதிலும் தரவுச் சுரங்கச் செயலிகளைப் பட்டியலிடுவது மோசமாகக் காணப்பட்டது.

**(d)** இந்தப் பகுதியைப் பொறுத்தவரை, வணிகப் பகுப்பாய்வுக் கருவிகள் தொடர்பான அறிவு பரீட்சார்த்திகளிடையே மோசமான மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

**(e)** பசுமை IT முயற்சிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நன்கு விளக்கியிருக்கவில்லை.

**(f)** முகில் கணினியியலைப் பயன்படுத்துவதன் நன்மைகளைக் குறிப்பிடும்போது, விடைகள் நன்றாக அளிக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

- - - -

**<u>செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள் :</u>**

**(1)** முழுமையான பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படித்தல் வேண்டும்.

**(2)** பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பங்களில் தேவையற்ற / சம்பந்தமற்ற விபரிப்புகளை அல்லது விபரங்களை எழுதக்கூடாது.

**(3)** பாடப்புத்தகம், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் தகவல் தொழினுட்பத்துடன் தொடர்புடைய பிற வாசிப்புப் பொருள்களை வாசித்தல் வேண்டும்.

**(4)** விடைகளை எழுதும்போது தகவல் தொழினுட்பத்துடன் தொடர்புடைய நடைமுறை அறிவையும் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்களையும் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சமர்ப்பிப்பதுடன் தேவையானவிடத்து உதாரணங்களையும் சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கு சரியாக இலக்கமிடப்படுவதையும் உறுதி செய்யவும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(7)** உங்களுடைய அறிவை மேம்படுத்த கடந்தகால வினாத்தாள்கள்/ முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைகளைப் படித்தல் வேண்டும்.

**(8)** நேரத்தை பயனுறுதிவாய்ந்த முறையில் முகாமை செய்ய பயிற்சி பெறவும்.

**(9)** விடைத் தாள்களைச் சமர்ப்பிப்பதற்கு முன், விடைகளுக்குச் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதை இரு முறை பரீட்சித்துக் கொள்ளவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் சித்தியடைகின்ற மனோதிடத்துடனும் பரீட்சையை எதிர்கொள்ளவும்.

- * * * -